සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
කාන්තා, ළමා කටයුතු සහ සමාජ ආරක්ෂණ අමාත්‍යාංශය - සමාජ ආරක්ෂණ අංශය
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - சமூகபாதுகாப்பு பிரிவு
**Ministry of Women, Child Affairs and Social Security – Social Security Division**

මගේ අංකය **எனது இல** My No: DSD/HO/04/ER/துரித சமுர்த்தி வீட்டுத்தோட்டம்
ඔබේ අංකය **உமது இல** Your No: ……………………
දිනය **திகதி** Date: 2020.04.08

சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,

**"சுபீட்சமிகு வீட்டுத்தோட்டம்"**

**சமுர்த்தி மாதிரி வீட்டுத்தோட்ட பயிர் செய்கை வேலைத்திட்டம் - 2020**

மேற்படி விடயம் தொடர்பில் எனது சம இலக்கமும் 2020.03.25ம் திகதியிடப்பட்டதுமான சுற்றறிக்கைக்கு மேலதிகமாக.

02 சமுர்த்தி மாதிரி வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் 20 வீட்டுத்தோட்டங்களை செயற்படுத்த வேண்டியதுடன் இதன் பொருட்டு ஏற்கனவே தங்களால் இனங்காணப்பட்ட சமுர்த்தி பயனாளிகள்/குறைந்த வருமானம் பெறுவோருக்கு விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை துரிதமாக வழங்க வேண்டியுள்ளது.

03.இன்றைய தினங்கிளில் பரவலாக உள்ள (COVID-19) நோய் காரணமாக விவசாயத்திணைக்களத்திலுள்ள ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாகவும் பொலித்தீனைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமங்கள் காரணமாகவும் விதைகளை பொதியிட்டு வழங்க முடியாது என விவசாயத்திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் துரிதமாக இந்த வேலைத்திட்டத்தினை செயற்படுத்த வேண்டியுள்ளதனால் இத்துடன் அனுப்பப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் தங்களது மாவட்டத்தின் பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கைக்கேற்ப ஒதுக்கப்பட்ட விதைகளின் எண்ணிக்கை மற்றும் விதைகள் இடப்படுகின்ற உறைகள் என்பன தங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கமைய தங்களது மாவட்டத்திற்குரிய விதைகளின் அளவு நில்லம்பை சமுர்த்தி பயிற்சி நிலையத்தில் தயார்படுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் அப்பயிற்சி நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி திரு. யூ. எம். அமரசிங்க அவர்களிடம் கேட்டறிந்து (071 8151218) குறித்த விதைகளை மேற்படி நிலையத்திலிருந்து 2020.04.10 திகதி வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த விதைகளை வரவழைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதன் பொருட்டு தங்களது மாவட்டத்தின் வாழ்வாதார விடயப் பொறுப்பு முகாமையாளரை ஈடுபடுத்திக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

04. தங்களுடைய மாவட்டத்தின் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் குறித்த உத்தியோகத்தர்களை ஈடுபடுத்திக் கொண்டு மாதிரியினை பொதியில்(பைக்கட்டில்) குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளுக்கு ஏற்றால் போல் விதைகளை பொதி செய்து கொள்வதற்கு பொருத்தமான முறையொன்றினை செய்து கொள்ளுமாறு அறியத்தருகின்றேன். இனம் காணப்பட்ட வீட்டுத்தோட்ட உரிமையாளர்கள், சகல சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அலுவலக வளவுகள் என்பவற்றின் பொருட்டு விதைகளை துரிதமாக வழங்க வேண்டியதுடன் விதைகளின் வளர்ச்சியடையக்கூடிய ஆற்றல்கள் குறைவடையலாம் என்பதனால் மிக

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල් | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) | ප්‍රධාන ගණකාධිකාරී | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) | කාර්යාලය |
|---|---|---|---|---|---|
| | பணிப்பாளர் தலைமையதிபதி | பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) | பிரதான கணக்காளர் | பணிப்பாளர் (குறு நிதி ) | அலுவலகம் |
| | Director General | Director (Admin & Establishment) | Chief Accountant | Director ( Micro Finance) | Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

விரைவாக விதைகளை களத்தில் நடுகை செய்வது புத்தாண்டு பிறப்புடன் மேற்கொள்ளப்படுகின்றமையினால் விதைகளை களத்தில் பயிரிடுவதற்கான நடவடிக்கைகளை புத்தாண்டுப் பிறப்புடன் ஆரம்பிக்குமாறும் மேலும் வினயமுடன் அறியத்தருகின்றேன்.

05. இந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்ள தங்களது கிட்டிய பின்பணி ஆய்வுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பதனால் இவை தொடர்பில் தங்களது பிரத்தியேக கவனத்தினைச் செலுத்துமாறும் எதிர்காலத்தில் வழங்கப்படும் படிவங்களுக்கமைய இதன் மாதாந்த முன்னேற்றத்தினை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மேலும் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்

ஆர்.பி.பீ. திலக்கசிரி,
பணிப்பாளர் தலைமையதிபதி

Translated by:- M.M.M.Jawhar (Translator)

**பிரதிகள் –**

1. செயலாளர், மகளிர்,சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - த.கூ.க.பொருட்டு
2. செயலாளர், மகாவலி விவசாய வடிகாலமைப்பு மற்றும் கிராமிய அபிவிருத்தி அமை - த.கூ.க.பொருட்டு
3. செயலாளர், சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு
4. பணிப்பாளர் தலைமையதிபதி, விவசாய திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
5. கணக்காளர் தலைமையதிபதி, கணக்காளர் நாயகத் திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
6. பிரதான கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
7. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
8. சகல பிரிவு தலைவர்கள் - த.கூ.க.பொருட்டு